admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது **தின கனி**

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்



தின கனி காலை நாளிதழ்

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-2272060 9443699066



கனி பிரிண்டிங்

DTP

நாளிதழ் வார இதழ் மாத இதழ்

சிறந்த முறையில் (DTP)செய்து தரப்படும்

நாளிதழ் மந்திலி மேகஸிங் குறைந்த விலையில் பிரின்டிங் செய்து தரப்படும்

தொடர்புக்கு : 94436 99066



மலர்:03 | இதழ்:269 | 4 பக்கங்கள் | 27:04:2026 | திங்கட்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தாரூ,1825




கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட் டவர்க்குல்.

**விளக்கம்:** எத்தனைத் துன்பங்கள் வரினும் தாங்கிக் குறிக்கோளில் உறுதியாக நிற்கும் ஆற்றலுடையவர்கள் சாவையும் வென்று வாழ்வார்கள்.

## "ரவுடிகளை; பாலியல் குற்றவாளிகளை பாஜக வேட்டையாடி பிடிக்கும்" - மேற்கு வங்கத்தில் மோடி உறுதி



வடக்கு 24 பர்கானாஸ்: மேற்கு வங்கத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு ரவுடிகளையும், பாலியல் குற்றவாளிகளையும் வேட்டையாடிப் பிடிப்போம் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.மேற்கு வங்கத்தின் பங்கான் நகரில் நடைபெற்ற பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, "திரிணமூல் காங்கிரஸின் காட்டு தர்பார் ஆட்சியால் முதன்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. அவர்கள் மிகப்பெரிய துரோகத்திற்கு ஆளாகியுள்ளனர். சந்தேஷ்காலியில் நமது சகோதரிகளுக்கு எதிராகக் கொடூரமான அட்டூழியங்கள் இழைக்கப்பட்டுள்ளன.திரிணமூல் காங்கிரஸின் காட்டு தர்பார் ஆட்சியின் கீழ், இளம் பெண்கள் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. மே 4-ஆம் தேதிக்குப் பிறகு, பாஜக அரசு ஒவ்வொரு ரவுடியையும், பாலியல் குற்றவாளியையும் வேட்டையாடிப் பிடித்து, அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்று கொடுக்கும். பாஜக பெண்களுக்குப் பாதுகாப்பையும், வாய்ப்புகளையும் ஒருங்கே வழங்கிறது. மேற்கு வங்கத்தில் பாஜக அரசாங்கம், ஒவ்வொரு ஆண்டும் பெண்களின் வங்கிக் கணக்குகளில் ரூ. 36,000 தொகையை நேரடியாகச் செலுத்தும். ஆஷா (ASHA) பணியாளர்கள் மற்றும் பிற பெண் சுகாதாரப் பணியாளர்களின் ஊதியம் குறித்தும் மேற்கு வங்க பாஜக ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. எங்கள் அரசாங்கம் தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் மகள்களுக்கு ரூ. 5 லட்சம் மதிப்பிலான இலவச மருத்துவ சிகிச்சையை வழங்கும்.பொது சுகாதார மையங்களில் மருத்துவச் சிகிச்சைகளுக்கு 80% கட்டணச் சலுகை வழங்கப்படும். மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பை வாய்ப் புற்றுநோயைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசிகள் இலவசமாக வழங்கப்படும். கர்ப்பக் காலத்தில் ரூ.21,000 நிதியுதவியும், மகள்கள் பட்டப்படிப்பை நிறைவு செய்யும்போது ரூ.50,000 நிதியுதவியும் பாஜக அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்படும்.பெண்கள் சொந்தத் தொழிலைத் தொடங்குவதற்காக வங்கிகளிடமிருந்து ரூ.20 லட்சம் வரை கடன் பெறலாம். வங்கிகளுக்குக் கடன் வழங்கும்போது ஒரு உத்தரவாதம் தேவைப்படும். ஆனால், சகோதரிகளே, அந்த உத்தரவாதத்தை நீங்கள் வழங்கத் தேவையில்லை. அந்த உத்தரவாதத்தை உங்கள் சகோதரனான மோடியே உங்களுக்கு வழங்குவார்.மேற்கு வங்கத்தின் விளையாட்டு கலாச்சாரத்திற்கு பாஜக ஒரு புதிய உத்வேகத்தை அளிக்கும். திரிணமூல் காங்கிரஸின் 'சிண்டிகேட்' இங்குள்ள விளையாட்டுச் சூழல் அமைப்பையே சீரழித்துவிட்டது. சில மாதங்களுக்கு முன்பு கொல்கத்தாவில் நடந்த நிகழ்வுகளும், உலகம் முழுவதும் உள்ள கால்பந்து ரசிகர்களைச் சென்றடைந்த அந்தப் படங்களும், இங்கு நிலவும் 'மகா காட்டு தர்பார்' கலாச்சாரத்தின் நேரடி விளைவுகளே ஆகும். மேற்கு வங்கத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். 'கேலோ இந்தியா' திட்டத்தின் கீழ், மேற்கு வங்கத்தில் ஒரு புதிய, சிறப்பான விளையாட்டுச் சூழல் அமைப்பு உருவாக்கப்படும்" என்று அவர் கூறினார்.

## அதிருப்தியால் ஆம் ஆத்மியில் இருந்து வெளியேறினோம்: பாஜகவில் இணைந்த ராகவ் சத்தா எம்.பி. கருத்து



புதுடெல்லி:ஏப்,27

ஆம் ஆத்மி கட்சிக்கு மாநிலங்களவையில் 10 எம்.பி.க்கள் இருந்தனர். அவர்களில் ராகவ் சத்தா, சந்தீப் பதக், அசோக் மிட்டல், சுவாதி மாலிவால், ஹர்பஜன் சிங், ராஜீந்தர் குப்தா, விக்ரம்ஜித் சிங் சாஹ்னி ஆகிய 7 எம்.பி.க்கள் பாஜகவில் இணைந்துள்ளனர். இதுதொடர்பாக ராகவ் சத்தா நேற்று கூறியதாவது:அச்ச உணர்வின் காரணமாக ஆம் ஆத்மியில் இருந்து விலகியிருப்பதாக அந்த கட்சி தலைவர்கள் கூறி வருகின்றனர். நாங்கள் அச்ச உணர்வால் விலகவில்லை. ஆம் ஆத்மி மீதான அதிருப்தி, விரக்தி, வெறுப்புணர்வு காரணமாக அந்தக் கட்சியில் இருந்து வெளியேறி உள்ளோம். ஆடம்பர மாளிகை விவகாரம் (கேஜ்ரிவால் வசித்த டெல்லி வீடு) காரணமாக ஆம் ஆத்மி மீதான நன்மதிப்பு குறைந்து உள்ளது. இதன் காரணமாகவே கடந்த டெல்லி சட்டப்பேரவைத் தேர்தலில் அந்த கட்சி மோசமான தோல்வியை தழுவியது. தற்போது 2-வது ஆடம்பர மாளிகை (கேஜ்ரிவாலின் தற்போதைய வீடு) விவகாரம் அம்பலமாகி உள்ளது. இந்த விவகாரம் குறித்து ஆம் ஆத்மி சுயபரிசோதனை செய்து கொள்வது அவசியம்.கட்சியின் ஒவ்வொரு தொண்டரும் ரத்தம், வியர்வை சிந்தி மிகக் கடினமாக உழைத்தனர். கட்சி தலைமையிடம் மிகுந்த எதிர்பார்ப்போடு காத்திருந்த அவர்கள் தற்போது அடுத்தடுத்து வெளியேறி வருகின்றனர். உண்மையை சொல்வதென்றால் ஆம் ஆத்மி தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அந்தக் கட்சியில் யாரும் நீடித்து நிலைத்திருக்க விரும்பவில்லை.ஒரு கட்சியில் ஊழல் அதிகரித்தால் அந்த கட்சியின் எம்பிக்கள் அணி மாற அரசியலமைப்பு சட்டத்தில் இடம் உள்ளது. இதன் காரணமாகவே ஆம் ஆத்மியில் இருந்து ஒரே நேரத்தில் 7 எம்பிக்கள் வெளியேறி உள்ளோம். மாநிலங்களவையில் நாங்கள் தனி அணியாக செயல்படுவோம். பாஜகவுக்கு இணக்கமாக செயல்படுவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அனைவரையும் சமமாக மதிக்க வேண்டும் மாணவர்களுக்கு நீதிபதி ஜெகதீஷ் சந்திரா அறிவுரை




கேளம்பாக்கம்: ஏப்,27

புதுப்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜெகதீஷ் சந்திரா, அனைவரையும் சமமாக மதிக்க வேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தினார். கேளம்பாக்கத்தை அடுத்த புதுப்பாக்கத்தில் உள்ள சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் இரண்டாவது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில், தமிழ்நாடு அரசு சட்டக்கல்வி இயக்குநர் கவுரி ரமேஷ் தலைமை வகித்தார். புதுப்பாக்கம் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி முதல்வர் ஜெயகவுரி வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஜெகதீஷ் சந்திரா. சரவணன் ஆகியோர் பங்கேற்று 600 இளங்கலை மாணவ, மாணவிகளுக்கும், 30 முதுகலை மாணவ, மாணவிகளுக்கும் பட் டங்களை வழங்கினர்.அப்போது நீதிபதி ஜெகதீஷ் சந்திரா பேசியதாவது, வழக்கறிஞர் தொழில் உன்னதமானது. இத்தொழிலில் வழக்கறிஞர் பேசுவதற்கு முன்பாகவே அவர் எப்படி என்று மதிப்பீடு செய்து விடுவார்கள். எனவே தோற்றம், கம்பீரம் இவை அனைத்தும் முக்கியம். நீதிமன்ற வழக்கறிஞர் உடைக்கு மதிப்பு உண்டு. அதை எப்போதும் நாம் மரியாதையுடன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மரியாதை என்பது பலவீனம் அல்ல. அது ஒரு கட்டுப்பாட்டுடன் கூடிய பலம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பேசும் விதம், அமைதி, குரல் இவை உங்களின் திறமையை வெளிப்படுத்துகிறது. நீதிமன்றத்தில் நாம் குரலை உயர்த்தி பேசி வாதாடினால் ஜெயித்து விடுவோம் என்று எண்ணி விடாதீர்கள். அமைதியாக பேசி வாதாடி வெற்றி பெற்ற விஷயங்கள் அதிகம் உண்டு. சத்தமாக வாதாடினால் வெற்றி பெற முடியாது, சரியான முறையில் வாதாடினால் தான் வெற்றி பெற முடியும். கடந்த காலங்களை விட தற்போது உள்ள கால கட்டத்தில் சட்டக் கல்வி வேகமாக வளர்ந்து வருகிறது. சட்டத்தை ஆழமாக படிக்க வேண்டும். தீர்ப்புகளை முழுமையாக வாசித்து தெரிந்து கொள்ள வேண்டும். நீதிமன்றத்தில் அதிகமாக வாதாடுவது கூட சில நேரத்தில் பலவீனத்தை ஏற்படுத்தும். எனவே துல்லியமாக, முக்கியமானதை சுருக்கமாக வாதாடினாலே வெற்றி தரும். நேர்மையாக. உண்மையாக இருக்க வேண்டும். ஏனென்றால் அப்போது தான் நீதிமன்றமும் நீதிபதிகளும் உங்களை நம்புவார்கள். பணம் படைத்தவர்களாக இருந்தாலும், எளியவர்களாக இருந்தாலும் மனிதர்களை மனிதர்களாக மதிக்க வேண்டும். அனைவரையும் சமமாக மதிப்பது நற்பண்பு. இவ்வாறு அவர் கூறினார்.பட்டறைப் பெரும்புதூர் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி முதல்வர் கயல்விழி, பேராசிரியர்கள். அலுவலக பணியாளர்கள், பெற்றோர், மாணவர்கள் கலந்து கொண்டனர். நிறைவில், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி இணைப் பேராசிரியர் சாந்தி நன்றி கூறினார்.

## வொண்டர்லா சென்னை, ஒருங்கிணைந்த உணவு வசதியுடன் கூடிய ரூ.37 கோடி மதிப்பிலான 'ஸ்கைவீல்' எனும் உயரிய அனுபவத்தை அறிமுகப்படுத்துகிறது



ஏப்,27

இந்தியாவின் மிகப்பெரிய கேளிக்கை பூங்கா குழுவான வொண்டர்லா ஹாலிடேஸ் லிமிடெட் இன்று சென்னையில் உள்ள தனது வொண்டர்லா பூங்காவில் 'ஸ்கைவீல்' சவாரியைத் தொடங்குவதாக அறிவித்தது. டிசம்பர் 2025-இல் தொடங்கப்பட்ட தனது புதிய பூங்காவின் வெற்றிகரமான பயணத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில், ரூ.37 கோடி முதலீட்டில் இந்த ஸ்கைவீல் அமைக்கப்பட்டுள்ளது. குளிர்சாதன வசதி கொண்ட அறைகளுடன் கூடிய, நாட்டின் மிக உயரமான ராட்டின சவாரிகளில் ஒன்றாக இந்த ஸ்கைவீல் திகழ்கிறது.. இந்த அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த, வொண்டர்லா ஹாலிடேஸ் லிமிடெட்டின் செயல் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அருண் கே.சிட்டிலப்பள்ளி கூறுகையில், "ஸ்கைவீல் என்பது, வொண்டர்லா சென்னைக்கு கிடைத்த ஒரு தனித்துவமான புதிய வரவாகும். மேலும், இது புதுமைகளை அடிப்படையாகக் கொண்ட அனுபவங்களில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்துவதன் பிரதிபலிப்பாகும். இது உண்மையிலேயே தனித்துவமான ஒன்றை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது - அதாவது, பிரம்மாண்டம், சௌகரியம் மற்றும் பிரமிக்க வைக்கும் காட்சிகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு அனுபவமாகும். அதே சமயம், இது அனைத்து வயதினருக்கும் எளிதில் அணுகக்கூடியதாகவும் உள்ளது. ஸ்கைவீலை சிறப்பானதாக ஆக்குவது அதன் உயரம் மட்டுமல்ல, இந்த அனுபவத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் பொதிந்துள்ள துல்லியமான பொறியியல் நுணுக்கமும், விருந்தினர்களை மையமாகக் கொண்ட வடிவமைப்பும்தான். எப்போதும் போலவே, வடிவமைப்பு மற்றும் உற்பத்தி முதல் அன்றாட செயல்பாடுகள் வரை நாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலிலும் பாதுகாப்பு என்பதே மையமாகத் திகழ்கிறது. என்றார்.

## வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள லயோலா கல்லூரிக்குள் ஆம்புலன்ஸ் வந்ததால் போலீஸாருடன் தவெகவினர் வாக்குவாதம்



சென்னை: ஏப்,27

லயோலா கல்லூரியில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் பாதுகாக்கும் மையத்துக்குள் ஆம்புலன்ஸ் வாகனம் சென்றதையடுத்து, சந்தேகமடைந்த தவெக நிர்வாகிகள் அங்கு பாதுகாப்பு பணியில்ஈடுபட்டிருந்த போலீஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சென்னையில் உள்ள 16 சட்டப்பேரவை தொகுதிகளில் பொதுமக்கள் வாக்களித்த மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், பலத்த போலீஸ் பாதுகாப்புடன் சென்னை லயோலா கல்லூரி, அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் ராணிமேரி கல்லூரி ஆகிய மூன்று இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, லயோலா கல்லூரி மையத்தில் அண்ணாநகர், வில்லிவாக்கம், கொளத்தூர், பெரம்பூர், ஆயிரம் விளக்கு மற்றும் எழும்பூர் ஆகிய 6 தொகு திகளின் வாக்குப் பதிவு இயந்திரங்கள் 'ஸ்ட்ராங் ரூமில்' வைக்கப்பட்டு, அரசியல் கட்சி முகவர்கள் முன்னிலையில் சீல வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மையத்திலும் 4 அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதில் சுழற்சி முறையில், 30 மத்திய துணை ராணுவப் படை வீரர்கள், உதவி ஆணையர் தலைமையில் 15 தமிழ்நாடு சிறப்புப் படை வீரர் கள், 40 ஆயுதப்படை வீரர்கள், 50 சட்டம்-ஒழுங்கு மற்றும் போக்குவரத்து போலீஸார் என மொத்தம் 500-க்கும் மேற்பட்ட வீரர்கள் இரவு, பகலாகப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு பணியாற்றும் காவலர்கள் மற்றும் ஊழியர்களுக்காகச் சிறப்பு மருத்துவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

திமுக, அதிமுக உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் முகவர்கள் உரிய அனுமதி பெற்று, அங்குள்ள கட்டுப்பாட்டு அறை கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் இரவு மருத்துவத் தேவைக்காக ஆம்புலன்ஸ் ஒன்று லயோலா கல்லூரி வளாகத்துக்குள் சென்றதாகக் கூறப்படுகிறது. இதைக் கண்ட தவெக நிர்வாகிகள், ஆம்புலன்ஸ் உள்ளே செல்வதில் சந்தேகம் இருப்பதாகக் கூறி பாதுகாப்புப் பணியில் இருந்த போலீஸாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.


தவெகவினர் பிடிவாதம்: மேலும், அவர்களிடம் முறையான அனுமதி கடிதம் இல்லாத நிலையிலும், அடையாள அட்டையை மட்டுமே காட்டி உள்ளே செல்ல அனுமதிக்கு மாறு அவர்கள் பிடிவாதம் பிடித்தனர். இதனைத் தொடர்ந்து, அனுமதி கடிதம் இன்றி உள்ளே நுழைய முடியாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்த போலீஸார், விதிகளை மீற வேண்டாம் என தவெக நிர்வாகிகளுக்கு கண்டிப்புடன் அறிவுரை வழங்கி அவர்களை அங்கிருந்து அனுப்பி வைத்தனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

## திருச்செந்தூரில் அலைமோதிய பக்தர்கள் கூட்டம் : 4 மணி நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம்!

ஏப்,27

முருகப்பெருமானின் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில், கோடை விடுமுறை மற்றும் ஞாயிறு விடுமுறையை முன்னிட்டு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்ததால், சுமார் 4 மணி நேரம் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.சிறந்த பரிகாரத் தலமாகவும், கடற்கரையில் அமைந்துள்ள ஆன்மீகச் சுற்றுலாத் தலமாகவும் விளங்கும் திருச்செந்தூருக்குத் தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட அண்டை மாநிலங்களிலிருந்தும் தினசரி பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். தற்போது கோவிலில் மெகா திட்ட வளாகப் பணிகள் நிறைவு பெற்று, திருப்பதிக்கு இணையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதால் பக்தர்களின் வருகை கணிசமாக அதிகரித்துள்ளது. கோவிலில் கடந்த 22-ஆம் தேதி தொடங்கிய 10 நாள் சித்திரை வசந்த திருவிழா தற்போது விமரிசையாக நடைபெற்று வருகிறது. இன்று 5-ஆம் நாள் திருவிழாவை முன்னிட்டு, மாலையில் சுவாமி ஜெயந்தி நாதர், வள்ளி-தெய்வானையுடன் தங்கச் சப்பரத்தில் வசந்த மண்டபத்தில் எழுந்தருளினார். அங்குச் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனைக்குப் பின்னர், சுவாமி தங்கத் தேரில் எழுந்தருளி கிரி வீதி உலா வரும் நிகழ்வு நடைபெற்றது.பள்ளிகளுக்குக் கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதாலும், இன்று ஞாயிறு விடுமுறை நாள் என்பதாலும் அதிகாலையிலிருந்தே பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. கடலில் புனித நீராடியும், நாழிக்கிணற்றில் நீராடியும் நீண்ட வரிசையில் காத்திருந்த பக்தர்கள், சுமார் 4 மணி நேரத்திற்குப் பிறகே மூலவரைத் தரிசிக்க முடிந்தது.கோவில் நடை வழக்கம்போல் அதிகாலை 4 மணிக்குத் திறக்கப்பட்டு விஸ்வரூபம் மற்றும் உதய மார்த்தாண்ட அபிஷேகம் உள்ளிட்ட கால பூஜைகள் சிறப்பாக நடைபெற்றன. பக்தர்களுக்கு வசதியாக நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

## குன்னூரில் அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு – பொதுமக்கள் அதிருப்தி



நீலகிரி:ஏப்,27

மாவட்டம் குன்னூரில் கடந்த 20 தினங்களாக தேர்தல் அலுவல் சம்மந்தமாக அரசுத்துறை அதிகாரிகள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்த நேரத்தை பயன்படுத்தி குன்னூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பல கட்டிடங்கள் எந்தவித அனுமதியுமின்றி கட்டப்பட்டுவருகின்றது இந்நிலையில் டிடிகே சாலையில் உள்ள கவ்டர் தியேட்டர் எதிர்புறம் எந்தவித ஆரவாரமும் இல்லாமல் அரசு புறம்போக்கு நிலம் சுமார் 12 சென்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து தனிநபர் கட்டிடம் கட்டப்பட்டு வருவதாகவும் சொந்த பட்டா நிலத்தில் வீடு கட்ட மாவட்ட நிர்வாகம் பல்வேறு விதிகளை விதித்துள்ள நிலையில் வருவாய்த்துறைக்கு சொந்தமான இடத்தில் தனி நபர் ஒருவர் வீடு கட்டுவது அப்பகுதி மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது இந்நிலையில் அப்பகுதி மக்கள் கூறுகையில் சம்பந்தப்பட்ட அரசு புறம்போக்கு நிலம் நகராட்சி சாலையில் உள்ளதாகவும் இது குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கும் நகராட்சிக்கும் புகார் அளித்தும் அதிகாரிகள் கையூட்டு பெற்றுக்கொண்டதாலேயே எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாக கூறினர் மேலும் இதுகுறித்து மாவட்ட வருவாய் அலுவலர் உடனடி நடவடிக்கை எடுக்கவும் கோரிக்கை வைத்தனர்.

# அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் சென்றால் குண்டர் சட்டம்

## திருவள்ளூர் ஆட்சியர் எச்சரிக்கை




திருவள்ளூர், ஏப். 27–
ஆற்றுப்படுகைகள், அரசு புறம் போக்கு நிலங்களில் இருந்து உரிய அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் செல்வோர் மீது குண்டர் சட்டம் பாயும் என ஆட்சியர் பிரதாப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஅவர்வெளியிட்ட அறிக்கை: திருவள்ளூர் மாவட்டத்தில், ஆற்றுப் படுகைகள், அரசு புறம்போக்கு நிலங்கள், பட்டா நிலங்களில் இருந்து அரசின் உரிய அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்களை வெட்டி யெடுத்து, வாகனங்களில் கடத்திச் செல்வது தொடர்பாக கடந்த 16ம் தேதி திருவள்ளூர் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலர்களால் ஊத்துக்கோட்டை வட்டத்தில் தீவிர ரோந்து பணிகள் மேற்கொண்டதில், உரிய அனுமதி நடைச்சீட்டுயில்லாமல் கள்ளத்தனமாக கனிமங்கள் (கிராவல் மற்றும் சாதாரண மண் ஏற்றிச் சென்ற 3 பாரஸ் வாகனங்கள் கைப்பற்றப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனவே, இதுபோன்ற வாகனங்களை கண்காணிக்க தொடர் தீவிர ரோந்து பணிகள் மேற்கொள்ளு மாறு வருவாய்த் துறை, கனிம வளத்துறை, காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச் செயலில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வதுடன், இக்குற்றச் செயலில் தொடர்ந்து ஈடுபடுவோரைக் கண்காணித்து அவர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு ஆட்சியர் பிரதாப் கூறியுள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டதிருப்போரூர் சட்டமன்ற தொகுதி திருப்போரூர் தெற்கு ஒன்றியத்தில்மானாமதி ஆமூர்சிறுதாவூர்மடையத்தூர்செம்பாக்கம்மயிலைகொட்டைமேடுகீழூர்கரும்பாக்கம்சிறுகுன்றம் அனுமந்தபுரம் பெருந்தண்டலம் முள்ளிப்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவினை 23.4.2026 அன்று திருப்போரூர் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் வழக்கறிஞர் பையனூர் எம்.சேகர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.இதில் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் பானை சின்னத்தில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் பன்னீர் தாஸ் மற்றும் திராவிட முன்னேற்ற கழகம் அனைத்து நிலை நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# களைகட்டிய கொடைக்கானல் படகு சவாரி



கொடைக்கானல்,ஏப். 27–
தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. மேலும் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறையும் அளிக்கப் பட்டுள்ளது. இதனால் தரைப்பகுதிகளில் நிலவும் வெப்பத்தை சமாளிக்கவும். குளு குளு சீசன் தொடங்கிய நிலையில் 'மலைகளின் இளவரசி' யான கொடைக்கானலுக்கு சுற்றுலா பயணிகள் படையெடுத்து வருகின்றனர். இதனால் நேற்று முன்தினம் காலை முதல் அவர்கள் வருகை அதிகரித்து காணப்பட்டது. இதனால் எங்கு பார்த்தால் மக்களின் தலையாகவே இருந்தது.

இதனால் சீனிவாசபுரம், உகார்த்தே நகர், மூஞ்சிக்கல், ஏரிச்சாலை, பாம்பார்புரம் மற்றும் வனப்பகுதிகளில் உள்ள சுற்றுலா தலங்களுக்கு செல்லும் சாலையிலும் சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் அணிவகுத்து ஊர்ந்தபடி சென்றன.

இதனால் பல்வேறு பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் மிகுந்து காணப்பட்டதால் கொடைக்கானல் நகரமே திக்குமுக்காடி போனது. இதனால் சுற்றுலாப்பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாமல் பாதிப்பு அடைந்தனர்.

கொடைக்கானல் மலைப்பகுதியில் பகல் நேரத்தில் 21 டிகிரி செல்சியஸ் முதல் 25 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் நிலவியது. பின்னர் பிற்பகல் முதல் அதிகாலை வரை லேசான காற்றுடன் கூடிய இதமான குளிரும் நிலவி வருகிறது.

இதனைசுற்றுலாபயணிகள் அனுபவித்தனர். மேலும் வனப்பகுதிகளில் உள்ள சுற்றுலா இடங்கள் மற்றும் நட்சத்திர ஏரியில் படகுசவாரி செய்தும், பூங்காவில் பூத்துள்ள பூக்களைக் கண்டும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த நிலையில், கோடை விடுமுறையை முன்னிட்டு சுற்றுலா தலங்களில் பொதுமக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். உதகை, கொடைக்கானலில் இதமான காலநிலையில் படகு, குதிரை சவாரி செய்து உற்சாகம் அடைந்து வருகின்றனர்.

கோடை வெப்பத்தைத் தணிக்க நெல்லை மாவட்டம் அகஸ்தியர் அருவியில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குவிந்து நீராடி மகிழ்ந்தனர்.

# மலைப்பாதையில் கார் தலைகுப்புற கவிழ்ந்து விபத்து

## சுற்றுலா வந்தபோது சோகம்



சேலம், ஏப். 27–
தர்மபுரியை சேர்ந்த செல்வம் (34), தனது மனைவி விஜயா மற்றும் உறவினர்கள் 4 பேருடன் நேற்று ஏற்காட்டிற்கு சுற்றுலா வந்தார். காரை செல்வமே ஓட்டி வந்தார். மலைப்பாதையில் 17வது கொண்டை ஊசி வளைவில் கார் வந்தபோது, திடீரென ஒரு குரங்கு சாலையை கடக்க ஓடியது.

இதனால் அதிர்ச்சி அடைந்த செல்வம் திடீரென பிரேக் போட்டதால், கட்டுப்பாட்டை இழந்த கார் அருகிலிருந்த பள்ளத்தில் தலைகுப்புற கவிழ்ந்தது.

இந்த விபத்தில் செல்வமும், அவரது மனைவி விஜயாவும் காயமடைந்தனர். மற்ற 3 பேர் காயமின்றி உயிர்தப்பினர். அருகில் இருந்தவர்கள் உடனடியாக அவர்களை மீட்டு ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நீலகிரியில்

# காட்டு யானை தாக்கி உயிரிந்தவரின் உடலை மீட்கச் சென்ற வனத்துறையினர் மீது தாக்குதல்

நீலகிரி, ஏப். 27–
நீலகிரி மாவட்டம் கூடலூர்அருகேகாட்டுயானை தாக்கியதில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். அவரது உடலை மீட்கச் சென்ற வனத்துறையினர் மீது பொதுமக்கள் நடத்திய தாக்குதலில் 7 ஊழியர்கள் காயமடைந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கூடலூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இந்நிலையில், ஊருக்குள் புகுந்த காட்டு யானை ஒன்று அந்த பகுதியில் இருந்த ஒருவரைத் தாக்கியது. இதில் அவர் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்து வந்த வனத்துறையினர், உயிரிழந்தவரின் உடலை மீட்க முயன்றனர்.

அப்போது, யானை ஊடுருவலைத் தடுக்க வனத்துறை முறையான நடவடிக்கை எடுக்கவில்லை எனக்கூறி ஆத்திரமடைந்த பொதுமக்கள், வனத்துறையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

வாக்குவாதம் முற்றிய நிலையில், பொதுமக்கள் திடீரென வனத்துறையினர் மற்றும் அவர்களின் வாகனங்கள் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப் பட்டு, சிகிச்சைக்காக கூடலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்தவன்முறைதொடர்பாக வனத்துறையினர் அளித்த புகாரின் அடிப்படையில், வனத்துறை ஊழியர்களைப் பணி செய்ய விடாமல் தடுத்தது மற்றும் அரசு வாகனத்தைச் சேதப்படுத்தியதற்காக 2 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக காவல்துறையினர் தீவிர விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

# மசினகுடி-ஊட்டி சாலையை கடந்து சென்ற புலி

## வாகன ஓட்டிகளுக்கு எச்சரிக்கை



நீலகிரி, ஏப். 27–
நீலகிரி மாவட்டம் கூடலூர், முதுமலை, மசினகுடி பகுதியில் கடும் வறட்சி நிலவி வருகிறது. வனப்பகுதி பசுமை இழந்து காணப் படுவதால் மான்கள் உள்ளிட்ட தாவர உண்ணி விலங்குகள்நீர்நிலைகளின் கரையோரம் உள்ள பசுமையை தேடி இடம்பெயர்ந்து வருகின்றன.

இதேபோல் ஊன் உண்ணிகளான புலிகள், சிறுத்தை, செந்நாய்கள் உள்ளிட்டவனவிலங்குகளுக்கு உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மான்கள் உள்ளிட்ட இரைகளைத்தேடி புலிகள் அதிக அளவில் இடம்பெ யர்ந்து வருகின்றன.இதன் காரணமாக மசினகுடி பகுதியில் உள்ள சாலைகளை புலிகள் அடிக்கடி கடந்து செல்கின்றன.

இந்த நிலையில் நேற்று முன் தினம் காலை மசினகுடியில் இருந்து ஊட்டி செல்லும் சாலையில் வாழைத் தோட்டம் பகுதியில் புலி ஒன்று சாலையை கடந்து சென்றது. அப்போது அந்த வழியாக ஊட்டிக்கு சென்ற சுற்றுலா பயணிகள் மற்றும் வாகன ஓட்டிகள் புலியை அச்சத்துடன் கண்டு ரசித்தனர். பின்னர் கம்பீர நடையுடன் புலி சாலையைக் கடந்து வனத்துக்குள் சென்றது. சாலையை கடந்து சென்ற புலியை வீடியோ எடுத்தவர்கள் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டனர். தற்போது அந்த காட்சி வைரலாகி வருகிறது.இதேபோல் மாயாறு உள்ளிட்ட சாலைகளிலும் புலி நடமாட்டம் அதிகமாக உள்ளது. இதனால் வாகன ஓட்டிகள், சுற்றுலா பயணிகள்தடை செய்யப்பட்ட பகுதிகளில் வாகனங்களை நிறுத்தி ஓய்வு எடுக்கக்கூடாது என்றும், கவனமாக செல்ல வேண்டும் என்றும் வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# முதியவர் வீட்டில் 10 பவுன் நகைபணம் திருட்டு

கோவை, ஏப். 27–
கோவை ரத்தினபுரி, பாலுசாமி நகரை சேர்ந்தவர் ஹரிராவ் (வயது60). இவர்தனியார் மருத்துவமனையில் ஊழியராக வேலை செய்து வருகிறார். இவர் நேற்று காலை வீட்டை பூட்டிவிட்டு வேலைக்கு போய்விட்டார். மனைவி மற்றும் குடும்பத்தினர் வெளியூர் சென்று இருந்தனர். இந்த நிலையில் நேற்று மாலை வேலை முடிந்து ஹரிராவ் வீட்டுக்கு வந்தார். அப்போது வீட்டு கதவின் பூட்டு உடைக்கப்பட்டு கிடந்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்து அவர் வீட்டுக்குள் சென்று பார்த்த போது பீரோ உடைக்கப்பட்டு துணிகள் சிதறிக்கிடந்தன. பீரோவில் இருந்த 10 பவுன் தங்கநகை, ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் ஆகியவை திருட்டு போனது தெரிய வந்தது.

இதுகுறித்து அவர் அளித்த புகாரின் பேரில் ரத்தினபுரி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கைரேகை நிபுணர்கள் தடயங்களை பதிவு செய்தனர். அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

சுட்டெரிக்கும் வெயில்:

# ஊட்டியில் குவிந்த சுற்றுலா பயணிகள்



ஊட்டி, ஏப். 27–
தமிழகத்தின் பல பகுதிகளில் கடந்த சில நாட்களாகவே வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது. குறிப்பாக மதிய நேரங்களில் வெளியில் செல்வதே சவாலாக இருக்கிறது. கொளுத்தும் கோடை வெயில் காரணமாக மக்கள் குளிர்ச்சியான ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை போன்ற இடங்களுக்கு படையெடுத்து வருகின்றனர்.

பள்ளி மாணவர்களுக்கு பொதுத்தேர்வு முடிந்து தற்போது கோடைவிடுமுறை விடப்பட்டுள்ளது. இதனால் கோடை விடுமுறையை இதமாக கழிக்க நீலகிரி மாவட்டத்துக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவுக்கு வந்த சுற்றுலாபயணிகள்அங்குள்ள மலர் செடிகளை கண்டு ரசித்து அதன்முன்பு புகைப்படம் எடுத்தும் மகிழ்ந்தனர். பூங்காவில் உள்ளபெரியபுல்தரையில் குடும்பத்துடன் அமர்ந்து பேசியும், குழந்தைகளுடன் விளை யாடியும் மகிழ்ந்து வருகின்றனர்.

இதேபோன்று ஊட்டி ரோஜா பூங்காவில் குவிந்த சுற்றுலா பயணிகள் அங்கு பூத்து குலுங்கிய ரோஜா பூக்களை கண்டு ரசித்தனர். ஊட்டி படகு இல்லத்திலும் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. படகு சவாரி செய்து அங்கு நிலவிய சீதோஷ்ண நிலையை சுற்றுலா பயணிகள் அனுபவித்தனர்.

இது மட்டுமல்லாது தொட்ட பெட்டா மலைசிகரம்,பைக்காராநீர்வீழ்ச்சி, பைக்காரா படகு இல்லம், பைன்பாரஸ்ட், கோத்தகிரி நேரு பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலா தலங்களிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது.

சுற்றுலா தலங்களை யொட்டி கடைகளில் குவியும் மக்கள் அங்கு தங்களுக்கு பிடித்தமான பொருட்களை வாங்கி செல்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளதால் ஊட்டியில் பல்வேறு முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. போக்குவரத்தை சீர் செய்யும் பணியில் போக்குவரத்து போலீசார் ஈடுபட்டனர். இன்னும் சில வாரங்களில் கோடைவிழா தொடங்கும் என்பதால் சுற்றுலா பயணிகள் வருகை இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வால்பாறை எஸ்டேட் பகுதியில்

# சிறுவர்களை தனியாக கடைகளுக்கு அனுப்ப வேண்டாம்

## வனத்துறை அறிவுறுத்தல்




வால்பாறை, ஏப். 27–
தமிழகத்தில் அனைத்து பள்ளிக்கூடங்களுக்கும் கடந்த 16ந் தேதி முதல் கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் குழந்தைகள் படிக்கும் அங்கன்வாடி மையங்களுக்கும் விடுமுறை விடப்பட்டு உள்ளது.


இந்நிலையில் வால்பாறை மற்றும் மானாம் பள்ளி வனச்சரக வனத்துறையினர் அனைத்து எஸ்டேட் பகுதி தொழிலாளர்களுக்கும் விடுமுறை நாட்களில் தங்களது பிள்ளைகளை வனப்பகுதி களுக்குள் அழைத்து செல்லக்கூடாது. மாலை நேரத்தில் சிறு குழந்தை களை வீட்டை விட்டு வெளியே விட வேண்டாம்.

சிறுவர், சிறுமிகளை எஸ்டேட் குடியிருப்பு பகுதியில் உள்ள கடைகளுக்குபொருட்கள்வாங்கி வர மாலை நேரம் மற்றும் இரவு நேரங்களில் தனியாக வெளியே அனுப்ப வேண்டாம்.

குடியிரு ப்பை ஒட்டிய தேயிலை செடிகள் உள்ள இடங்களில் தொழிலாளர்கள்தங்கள்குழந்தைகளை கண்காணித்துக் கொள்ள வேண்டும்.

சிறுத்தைப்புலிகள் உள்ளிட்ட வனவிலங்குகளிடம் இருந்து குழந்தைகளை தற்காத்து கொள்ள மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றனர். இந்த கோடை விடுமுறை நாட்களில் சிறுவர்களை மோட்டார் சைக்கிளை ஓட்ட அனுமதிக்க கூடாது.

எனவே பெற்றோர் நீங்கள் தான் உங்களது பிள்ளைகளுக்கு உரிய அறிவுரைகள் சொல்லி பாதுகாக்க வேண்டும் என போலீசாரும் எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு மற்றும் திருப்போரூர் சட்டமன்ற தொகுதிகளுக்கான செங்கல்பட்டு, ஆத்தூர் சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையத்தில் நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.மாலதி ஹெலன், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ரம்யா, திருப்போரூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்விஜயகுமாரி, மகளிர் திட்ட இயக்குநர்லோகநாயகி, துணை காவல் கண்காணிப்பாளர் புகழேந்தி கணேஷ், தேர்தல் வட்டாட்சியர் சிவசங்கரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ராஜபாளையம் அருகே

# நூல் விலை உயர்வை கண்டித்து சத்திரப்பட்டி பகுதியில் பாண்டேஜ் உற்பத்தியாளர்கள் வேலை நிறுத்தம்!

## 4 தினங்களில் ரூ.10 கோடி உற்பத்தி இழப்பு!!

விருதுநகர், ஏப். 27–

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே சத்திரப்பட்டி, சமுசிகாபுரம், சங்கர பாண்டியபுரம், அய்யனாபுரம் போன்ற பகுதிகளில் சர்வதேச அளவில் பேண்டேஜ் உற்பத்தி செய்யும் விசைத்தறிக் கூடங்கள் உள்ளன. 5000 க்கும் மேற்பட்ட விசைத் தறிகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். சமீப காலத்தில் மத்திய அரசு நூல் விலையை கணிசமான அளவு உயர்த்திய தன் காரணமாக இத்தொழில் நலிவடையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஒரு கிலோ 40 ம் எண் நூல் ரூ.250 ல் இருந்து ரூ. 300 ரூபாயாக மத்திய அரசு உயர்த்தியது. தற்போது மேலும் 10 ரூபாய் உயர்த்தி,ரூ.310ரூபாய்க்கு இன்றைய நிலையில் விலை ஏற்றம் கண்டுள்ளது.

இதன் காரணமாக ஏற்கனவே ஒரு மாதத்திற்கு முன்பே பேண்டேஜ் மருத்துவ துணி விநியோகம் செய்வதற்கு ஆர்டர் எடுத்து வந்த நிலையில் தற்போது வெளியேற்றம் காரணமாக உற்பத்தி செலவு மிகவும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் உற்பத்தி செலவு அதிகரித்ததின் காரணமாக பழைய விலைக்கு விற்க முடியாத நிலையில் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒப்பந்தம் போட்டு பழைய விலைக்கு விற்காவிட்டால் வாடிக்கையாளர்கள் புதிய விலைக்கு ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

எனவே பழைய விலைக்கு விற்பனை செய்து நஷ்டத்தில் தொழில் செய்ய வேண்டிய நிலைக்கு சத்திரப்பட்டி பகுதி பாண்டேஜ் உற்பத்தியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையை கருத்தில் கொண்டு மத்திய அரசு உடனடியாக நூல் விலையை கட்டுப்படுத்தி பேண்டேஜ் தொழில் வாழ்வாதாரத்தை காப்பாற்றுமாறு பேண்டேஜ் உற்பத்தியாளர்கள்சார்பில் கோரிக்கைவிடப்பட்டுள்ளது.




தற்போது கடந்த 4 தினங்களாக நூல் விலை உயர்வை கண்டித்து வேலை நிறுத்தம் அறிவிக்கப்பட்டு நேற்றுடன் வேலை நிறுத்தம் முடிவடைந்துள்ளது.

இன்று மறுபடியும் விசைத்தறிக் கூடங்கள் திறந்து பேண்டேஜ் உற்பத்தி தொடக்குவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 10 ரூபாய் ஒரு கிலோ விலை உயர்த்தப்பட்டுள்ளது மிகவும் வருந்தத்தக்கது என பேண்டேஜ் உற்பத்தியாளர்கள் கருதுகின்றனர்.

மேலும் இப்பகுதி சர்வதேச அளவில் பேண்டேஜ் உற்பத்தியில் முதலிடம் வகிப்பது என்பதால் இப்பகுதியில் ஜவுளி உற்பத்தி பூங்கா ஏற்படுத்தி அதற்கான பூர்வாங்கப் பணிகளை மத்திய அரசு செய்ய வேண்டும் என இப்பகுதி பேண்டேஜ் உற்பத்தியாளர்கள் சார்பில் மத்திய அரசுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

# திராவிடர் கழக மகளிர் அணி தொண்டர் ஆச்சியம்மாளின் படத்திறப்பு விழா

திருவாரூர், ஏப். 27–

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியம் பருத்தியூர் ஊராட்சியில் திராவிடர் கழக மகளிர் அணி தொண்டர் ஆச்சியம்மாள் படத்திறப்பு விழா நடைபெற்றது .

கொரடாச்சேரி ஒன்றியம் பருத்தியூர் பகுதியில் வசித்து வந்த சின்ன பிள்ளையின் ஆச்சியம்மாள் கடந்த ஏப்ரல் 5 வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார்.

அதனைத் தொடர்ந்து அவரின் படத்திறப்பு விழா கொரடாச்சேரி திராவிடர் கழக ஒன்றிய தலைவர் ஏகாம்பரம் தலைமையில் அவரது கணவர் சின்ன பிள்ளை, திராவிடர் கழக மாவட்ட இளைஞரணி தலைவர் கோ.



பிளாட்டோ மாவட்ட தொழிலாளர் அணி செயலாளர் வா. நேரு ஒன்றிய செயலாளர் மு. சரவணன் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஆர்கே வேலு தளபதி பொன் அப்பு சாமி ஆகியோரின் முன்னிலையில்படத்திறப்பு விழா நடைபெற்றது.

திராவிடர் கழக மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் வீ. மோகன் கலந்து கொண்டு உருவப் படத்தினை திறந்து வைத்து அவரது இயக்க பணிகளை நினைவு கூர்ந்து மலர் அஞ்சலி செலுத்தினார்.

கலந்து கொண்ட அனைவரும் அவரின் நினைவை போற்றி இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

திராவிடர் கழக தொண்டர்சின்னபிள்ளை குடும்பத்தினர்களான வில்வழகன் தேசமணி ராஜீவ் காந்தி அஜய் ஆகியோர் ஏற்பாடுகளை சிறப்பாக செய்து வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.




மதுரை மாவட்டம் ஒத்தக்கடை பகுதியில் மதுரை மாநகர் மேல பெருமாள் மேஸ்திரி வீதியில் இயங்கி வரும் மதுரை டவுன் தேநீரகத்தின் இரண்டாவது கிளை தொடங்கப்பட்டுள்ளது.இதன் திறப்பு விழாவில் தூய்மை பணியாளர்களை கௌரவிக்கும் விதமாக தூய்மை பணியாளர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைத்து வரப்பட்டு திறக்கப்பட்டது. தொடர்ந்து தூய்மை பணியாளர்களுக்கு சால்வை அணிவிக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் சிவகங்கை சீமையார் எஸ் எஸ் நந்தகுமார் மற்றும் உரிமையாளர் மனோஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி மாவட்டத்தில்

# 15 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் குற்றவாளிக்கு 16 வருடம் சிறை தண்டனை

## மாவட்ட எஸ்பி ஸ்டாலின் பாராட்டு

கன்னியாகுமரி, ஏப். 27–

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் விரைவில் விசாரணை முடித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதையும் அவ்வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை கண்காணித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் ஆகிய செயல்பாடுகள் மூலம் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தருவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.



இந்நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு கடையாலுமூடு, பொன்கலை பகுதியை சேர்ந்த வின்சன்ட் என்பவரது மகன் அனில் குமார் (27) என்ற குற்றவாளி 15 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததற்காக அனைத்து மகளிர் காவல் நிலையம் மார்த்தாண்டத்தில் குற்ற எண் 05/ 2017 U/s 294(b), 506(1) IPC & 3,4 of POCSO Act and 3(1) w(i) & 3(2)(va) SC/ST POA Act இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நாகர்கோவில் போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது இந்நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிக்கு 16 வருடம் சிறை தண்டனை மற்றும் 13000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு அளித்தார்.

நீதிமன்ற வழக்கு விசாரணை மற்றும் சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு வழக்கறிஞர், நீதிமன்ற காவலர் இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணை முறையாக கண்காணித்த மார்த்தாண்டம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர், மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை குமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் வெகுவாக பாராட்டினார்.





திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், செவ்வாய்பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி கல்லூரியில் சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 வாக்குப்பதிவு நிறைவடைந்து,வாக்கு எண்ணிக்கை மையத்தில் மூன்று அடுக்கு காவல் பாதுகாப்பு மற்றும் சிசிடிவி கண்காணிப்பில் இருப்பு அறை பில் (Strong Room) சீல் செய்து வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், நேரில் ஆய்வு மேற்கொண்டார்

# நெல்லை அகஸ்தியர் அருவியில் கட்டணம் உயர்வு

நெல்லை, ஏப். 27–

தமிழகத்தில் கோடை காலம் தொடங்கிய நிலையில் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. இதனால் சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமானவர்கள் குடும்பத்துடன் தங்களுடைய சொந்த ஊரான நெல்லை, தென்காசி உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கு படையெடுத்து வருகின்றனர்.

தற்போது கோடைவெயில் சுட்டெரித்து வரும் நிலையில், அதில் இருந்து தப்பிக்கவும், மன சோர்வை நீக்கவும். பலரும் குடும்பத்துடன் சுற்றுலாவுக்குசெல்லதொடங்கி உள்ளனர்.



அந்த வகையில் நெல்லை மாவட்டம் பாபநாசத்தில் ஆண்டு முழுவதும் தண்ணீர் கொட்டக்கூடிய அகத்தியர் அருவியில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டு வருகிறது.

இந்த அருவிக்கு சேர்வலாறு மற்றும் காரையார் அணைகளில் இருந்து தண்ணீர் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 25 அடி உயரத்தில் இருந்து விழும் இந்த அருவியில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பினரும் குளித்து மகிழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் அகஸ்தியர் அருவியில் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை வனத்துறை சார்பில் ரூ.20 வசூலிக்கப்பட்ட நிலையில் ரூ.10 அதிகரித்து ரூ.30 வசூலிக்கப்படுகிறது.

அரசு முறையான அரசாணை வெளியிட்டபின் கட்டணம் குறைப்பு குறித்து முடிவெ டுக்கப்படும் என்று வனத்துறை தெரிவித்துள்ளது.

இதனிடையே அகஸ்தியர் அருவி மற்றும் மணிமுத்தாறு அருவிகளுக்கு செல்கின்ற பயணிகளை வனத்துறையினர் சோதனைச்சாவடியில்சோதனை செய்த பின்னரே அனுமதித்து வருகின்றனர். இங்கு பிளாஸ்டிக் மற்றும் மது பாட்டில்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### கோவை மாவட்டத்தில்

# தேர்தலில் வாக்களிக்காத 4.19 லட்சம் வாக்காளர்கள்

கோவை, ஏப். 27–

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த 23ந் தேதி நடந்தது. இதில் கோவை மாவட்டத்தில்உள்ள10சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்களிக்க 3 ஆயிரத்து 540 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தது. வாக்குச்சாவடிகளில் காலை முதலே வாக்காளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் வாக்களித்தனர். குறிப்பாக இளம் வாக்காளர்கள் திரளாக வந்தனர்.

இதன் காரணமாக கோவை மாவட்டத்தில் 84.72 சதவீத வாக்குகள் பதிவானது. இந்த தேர்தலில் மாவட்டத்தில் 13,22,759 ஆண்கள், 14,21,179 பெண்கள், 3ம் பாலினத்தவர் 534 பேர் என மொத்தம் 27 லட்சத்து 44 ஆயிரத்து 472 பேர் வாக்களிக்க தகுதி பெற்று இருந்தனர். வாக்குப்பதிவின் முடிவில், 11,19,272 ஆண்கள், 12,05,420 பெண்கள், 3ம் பாலினத்தவர்கள் 319 பேர் என மொத்தம் 23 லட்சத்து 25 ஆயிரத்து 11 பேர் வாக்களித்து இருந்தனர். இதன் மூலம் 4 லட்சத்து 19 ஆயிரம் பேர் வாக்களிக்கவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

இது குறித்து தேர்தல் பிரிவு அலுவலர்கள் கூறியதாவது:

கோவை மாவட்டத்தில் கடந்த ஆண்டு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த (எஸ்.ஐ.ஆர்.) பணி நடைபெற்றது. இதில் இறந்த வாக்காளர்கள், இரட்டைப் பதிவு என மொத்தம் 6½ லட் சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டன.இதுமொத்த வாக்காளர் களில் 20 சதவீதம் ஆகும். இந்த நடவடிக்கைக்கு நல்ல வரவேற்பு கிடைத்து உள்ளது. இதன் காரணமாக முன்எப்போதும் இல்லாத வகையில் கோவை மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு சதவீதம் நன்றாக அதிகரித்து உள்ளது.

கோவை வடக்கு தொகுதியில் 75 சதவீத வாக்குகள் பதிவானது. மற்ற 9 தொகுதிகளிலும் 82 சதவீதத்திற்கு மேல் வாக்குகள் பதிவாகி உள்ளது. குறிப்பாக கவுண்டம்பாளையம் தொகுதியில் 4 லட்சத்து 22 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். மிகப்பெரிய தொகுதியான இங்கு 3 லட்சத்து 60 ஆயிரம் பேர் வாக்களித்து உள்ளனர். இது 85 சதவீதம் ஆகும்.

கோவை வடக்கு தொகுதியில் வாக்குப்பதிவு சதவீதம் குறைந்தது குறித்து ஆய்வு செய்து வருகிறோம். வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து கடந்த 2 மாதங்களாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினோம். இதனால் வாக்களிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு வாக்காளர்களிடம் அதிகரித்து உள்ளது. அதற்குரிய பலன் ஓட்டு சதவீதம் அதிகரித்ததன் மூலம் தெரிய வந்து உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# ஈரோடு காவிரி ஆற்றில் மூழ்கி தனியார் நிறுவன ஊழியர் பலி

ஈரோடு, ஏப். 27–

ஈரோடு மாவட்டம், சோலார் அருகே உள்ள சின்னியம்பாளையம் பகுதியைசேர்ந்தவர்பெரோஸ் கான். இவர் கத்தார் நாட்டில் வேலை பார்த்து வருகிறார். அவருடைய மகன் பைசல் கான் (வயது 21). இவர் சென்னையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் ஊழியராக பணியாற்றி வந்தார்.

இந்த நிலையில் கடந்த 23ந் தேதி நடந்த சட்டமன்ற தேர்தலில் ஓட்டு போடுவதற்காக இவர் தனது சொந்த ஊரான சின்னியம்பாளையத்துக்கு வந்திருந்தார். அவர், நேற்று முன்தினம் தனது நண்பர்களுடன் சாவடிப்பாளையம் அருகே உள்ள நட்டாற்றீஸ்வரர் கோவில் பகுதியில் உள்ள காவிரி ஆற்றில் குளிப்பதற்காக சென்றுள்ளார்.

முதலில் நண்பர்களுடன் ஆழம் இல்லாத பகுதியில் நின்று குளித்த பைசல் கான், பின்னர் ஆற்றின் ஆழமான பகுதிக்கு சென்றதாக கூறப்படுகிறது. இதனால் அவர் தண்ணீரில் மூழ்க தொடங்கினார். இதை பார்த்த நண்பர்கள்அவரை காப்பாற்ற முயன்றனர். ஆனால் முடியவில்லை. இதைத்தொடர்ந்து அங்கு குளித்து கொண்டிருந்தவர்களிடம் கூறினார்கள். உடனே அவர்கள் பைசல் கானைகாப்பாற்றும்முயற்சியில் ஈடுபட்டனர்.

சிறிது நேர போராட்டத்துக்கு பிறகு பைசல்கானை மயங்கிய நிலையில் மீட்டனர். அதன்பின்னர்அவரை சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு டாக்டர்கள் பரிசோதித்துவிட்டு பைசல் கான் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து மொடக்குறிச்சி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.





வேலூர் மாவட்டம், வேலூர் பேஸ் 2 சத்துவாச்சாரியில் அமைந்துள்ள வி.வி.கிளினிக் மற்றும் நிலா குழந்தைகள் நலம் இணைந்து நடத்திய இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் இரத்த சர்க்கரை அளவு, இரத்த கொழுப்பு, எலும்பு உறுதி, நீரிழிவு, நரம்பியல் கோளாறுகளை கண்டறிதல், நுரையீரல் செயல்பாடு சோதனை, கண் பரிசோதனை ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொண்டு பொதுநலம் மற்றும் சர்க்கரை நோய் நிபுணர் பா. விஜய்குமார் மற்றும் பச்சிளம் குழந்தைகள் சிறப்பு மருத்துவர் கா. சரண்யா ஆகியோர் ஆலோசனைகள் வழங்கினர். இதில் மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S. ஜெயக்குமார், நேற்று (26.04.2026) கடலூர் தேவனாம்பட்டினம் அரசு கலைக் கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தை பார்வையிட்டு, பாதுகாப்பு பணி சம்பந்தமாக காவலர்கள் மற்றும் மத்திய துணை ராணுவ படையினருக்கு அறிவுரை மற்றும் ஆலோசனை வழங்கினார்

# தென்காசியில் ரயில் பயணிகளுக்கு தர்ப்பூசணி, மோர் வழங்கல்




**தென்காசி, ஏப். 27**

தென்காசி ரயில் பயணிகள் சங்கம் சார்பாக ரயிலில் பயணிக்கும் பயணிகளுக்கு நீர்மோர் வழங்குதல் நிகழ்ச்சி தென்காசி ரயில் நிலையத்தில் வைத்து சங்கத் தலைவர் வெங்கடேஸ்வரன் தலைமையில் செயலாளர் மசூது அலி, முகமது அலி, ஆலோசகர் கோமதி சந்திரசேகர், முருகையா, வேலுச்சாமி, சண்முகம், மனோகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் நிலைய மேலாளர் சந்திரகுமார், நிலைய அதிகாரி வில்சன், மண்டல வர்த்தக மேலாளர் ரமேஷ், சுகாதார ஆய்வாளர் ராஜேஷ், இருப்பு பாதை உதவி ஆய்வாளர் மகாகிருஷ்ணன் உள்ளிட்ட தென்காசி ரயில் நிலைய அதிகாரிகள் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் வெளியூர்களில் இருந்து வரும் பயணிகளை கோடை வெயிலில் இருந்து பாதுகாக்கும் வகையில் தென்காசி ரயில் பயணிகளுக்கு நீர் மோர், தர்ப்பூசணி போன்றவற்றை வழங்கினர். திருநெல்வேலி செங்கோட்டை பயணிகள் தொடர்வண்டியில் பயணித்த நூற்றுக்கணக்கான பயணிகள் தர்ப்பூசணி மற்றும் நீர் மோரினை பெற்று அருந்தி சென்றனர்.

# திண்டுக்கல்லில் உலகப் புத்தகத் திருநாள்விழா மற்றும் சிறப்புப் புத்தகக் கண்காட்சி

**திண்டுக்கல், ஏப். 27**

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் சார்பாக உலகப் புத்தகத் திருநாள்விழா மற்றும் சிறப்புப் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. பல்கலை துணை வேந்தர் ந.பஞ்சநதம் புத்தக கண்காட்சியை திறந்து வைத்தார்.





காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் சார்பில் உலகப் புத்தகத் திருநாள் விழா மற்றும் சிறப்புப் புத்தகக் கண்காட்சி பல்கலையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட பல்கலைக்கழகத் துணை வேந்தர் ந.பஞ்சநதம் புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்து தலைமையுரை வழங்கினார்.

தமிழ்த்துறைத் தலைவரும் விழா ஒருங்கிணைப்பாளருமான பா.ஆனந்தகுமார் வரவேற்று பேசும்போது “யுனெஸ்கோ அமைப்பால் ஆண்டுதோறும் அறிவிக்கப்பட்டு கொண்டாடப்படும் நாட்களில் உலகப் புத்தகத் தினமும் ஒன்று. இன்றைய இளைஞர்களிடையே வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைந்து வருகிறது. அதனை மேம்படுத்தும் பொருட்டே ஆண்டுதோறும் ஏப்ரல் 23 அன்று உலகப் புத்தகம் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. மாணவர்கள் நாள்தோறும் ஒரு புத்தகம் வாசிப்பது என இலக்கு வைத்து வாசிப்பில் ஈடுபடும்போதுதான் வெற்றியடைய முடியும்” என்றார்.

பல்கலை துணை வேந்தர் பஞ்சநதம் தனது தலைமையுரையில் “நம் நாட்டில் வாசிப்பிற்கு வழங்கப்படும்முக்கியத்துவம் இன்று குறைந்து வருகிறது. ஆனால், லித்வேனியா நகரத்தில் உள்ள அனைத்து வீடுகளிலும் நூலக த்தைக் காண முடியும். வாசிப்புப் பழக்கத்தை முதன்மையானதாகக் கருதி தவறாது அதனை மேற்கொண்டவர்களே வாழ்வில் வெற்றியடைந்துள்ளனர். நம் நாட்டின் முன்னாள் பிரதமர் நேரு பயணத்தின்போதுகூட வாசிக்கும் வழக்கத்தை உடையவர். சாக்ரடீஸ், பகத்சிங், அண்ணாதுரை ஆகியோர் மரணத்தைப் பொருட்படுத்தாமல் சாகும் நொடி வரை வாசித்துக்கொண்டிருந்தனர்.

வாசிப்பின் மீதிருந்த பற்றே அவர்களை உயர்த்தியது. அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு இளைஞர்கள் தினமும் வாசிப்பில் ஈடுபட வேண்டும்” என்றார். அதனைத் தொடர்ந்து என்னைக் கவர்ந்த புத்தகம் என்னும் தலைப்பில் முனைவர்பட்டம் ஆய்வாளர் ம.தாட்சாயனி, முதுகலைத் தமிழ் மாணவர்கள் அ.சுபாஷினி, தி.விக்னேஷ்குமார் ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தின் முதுநிலை விற்பனை சீரமைப்பாளர் அ.கிருஷ்ணமூர்த்தி நன்றியுரை வழங்கினார். விழாவில் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் சி.சிதம்பரம், இந்தித் துறை மூத்த பேராசிரியர் மொகல் சலீம் பெய்க் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ் மற்றும் இந்தித் துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள், கௌரவ விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் ஆகியோர் பார்வையாளர்களாகப் பங்கேற்றனர்.



வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் அடுத்த பி.கே.புரம் கிராமத்தைச் சார்ந்த கராத்தே மற்றும் சிலம்பம் வீரர்கள் மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச அளவிலான போட்டியில் தங்கப் பதக்கம் பெற்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்தனர். கிராண்ட் மாஸ்டர் ரமேஷ் பாபு, காட்பாடி தலைமை மாஸ்டர் பழனி ஆகியோரின் அறிவுறுத்தலின்படி கே.வி. குப்பம் கராத்தே மாஸ்டர் டி.வினோத்குமார் தலைமையில் கராத்தே மாஸ்டர்கள் குபேந்திரன், தவமணி, லோகநாதன், சரத், கோகுல், மதன் குமார் ஆகியோரின் பயிற்சி வகுப்பில் கே.வி.குப்பம் சட்டமன்ற உறுப்பினர் பூவை ஜெகன் மூர்த்தியை நேரில் அழைத்து மாணவர்களுக்கு சால்வை அணிவித்து பாராட்டினார். ஜப்பான் சிட்டோரியோ கராத்தே பள்ளி மற்றும் VSJ ஸ்கூல் ஆஃப் மார்ஷியல் ஆர்ட்ஸ் மாணவர்கள் மலேசியா கோலாலம்பூரில் உள்ள திவாங்சா மைதானத்தில் 18.04.2026 முதல் 19.04.2026 வரை நடைபெற்ற 15 வது சைலன்ட் நைட் சர்வதேச கராத்தே கோப்பை 2026 மற்றும் சிலம்பப் போட்டியில் கலந்துகொண்டுதங்கம், வெள்ளிமற்றும்வெண்கலபதக்கங்களைவென்றுசாதனைபடைத்தார்கள்என்பதைகுழுவினர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டனர். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திறமையான போட்டியாளர்களுடன் விளையாடி இம்மாணவர்கள், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் பதக்கங்களை வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளனர். ஜமிதா, மதன் குமார், மதுஸ்ரீ, கனிஷிகா, லோகித் சூர்யா, தனுஷ் மற்றும் மோனிஷ்ராஜ் ஆகிய மாணவர்கள் போட்டியில் கலந்து கொண்டனர். இந்த அணியை சிறப்பாக பயிற்சி அளித்து வழிநடத்திய மாஸ்டர் டி வினோத் குமார், அணியின் நிர்வாக பொறுப்புகளை திறம்பட மேற்கொண்ட அணி மேலாளர் வி.ரம்யா, இந்த வெற்றி, கிராமப்புற மாணவர்களின் திறமை மற்றும் விடாமுயற்சியை உலக அரங்கில் வெளிப்படுத்துவதோடு, இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளது. சாதனை படைத்த வீரர்களுக்கு மாணவர்களின் பெற்றோர்களும் அனைத்து மாஸ்டர்களும் ஊர் பொதுமக்களும் வெகுவாக பாராட்டினார்கள்.



சேலம் மாவட்டம், ஏற்காடு, சேலம் தெற்கு மற்றும் வீரபாண்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், ஸ்ரீ கணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வாக்கு எண்ணும் மைய இருப்பறையில் காவல்துறை பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ் நேற்று (26.04.2026) ஆய்வு மேற்கொண்டார்.



வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் வட்டம், ஐதர்புரம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சிங்காரவேலன் முனீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற 5ஆம் ஆண்டு முப்பூஜை விழாவில் சுவாமிக்கு அபிஷேகமும், சந்தன காப்பு அலங்காரமும், கேரள மேளம், பம்பை, தாரை தப்பட்டை யுடன், கரகம் ஊர்வலமும், பொங்கலி டுதல், முப்பூஜை செய்தல் மற்றும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கு தல், வான வேடிக்கையுடன் பூங்கரகம் இறக்குதல், ஆற்றங்கரை யில் கருப்பு சாமி காட்டேரி வணங்குதல் ஆகிய நிகழ்ச்சிகள் பக்தர்கள் ஊர் பெரிய வர்கள் விழா குழுவினர்கள் ஆகிய முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஐதர்புரம் கிராம மக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CALL: 044-22772060,9443699066